இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

நாங்கள் உங்களிடையே இருந்த பொழுது, தாய் தன் குழந்தைகளைப் பேணி வளர்ப்பது போல், கனிவுடன் நடந்து கொண்டோம். இவ்வாறு உங்கள்மீது ஏக்கமுள்ளவர்களாய், கடவுளுடைய நற்செய்தியை மட்டுமன்றி, எங்களையே உங்களுக்குக் கொடுத்துவிட ஆவலாய் இருந்தோம்; ஏனெனில் நீங்கள் எங்கள் அன்புக்குரியவர்கள் ஆகிவிட்டீர்கள். அன்பர்களே! நாங்கள் எவ்வாறு பாடுபட்டு உழைத்தோம் என்பதை நினைத்துப் பாருங்கள். உங்களுள் எவருக்கும் சுமையாய் இராதபடி, எங்கள் பிழைப்புக்காக இராப் பகலாய் வேலை செய்து கொண்டே, கடவுளுடைய நற்செய்தியை உங்களுக்குப் பறைசாற்றினோம். (1 தெச 2: 7b-9)

# 16-வது ஆயர்களின் கூட்டொருங்கியக்க பேரவை

## “உலகலாவியத் திருஅவை அனைவருக்கும் செவிசாய்க்க வேண்டும்”



# இறைமக்களுக்கான சிறப்பு மடல்

அன்பான சகோதரர் சகோதரிகளே, 16-வது உலக ஆயர்கள் மாமன்றத்தின் முதல் அமர்வின் செயல்பாடுகள் முடிவடையும் நிலையில், நாங்கள் வாழ்ந்த அழகான மற்றும் வளமான அனுபவத்திற்காக உங்கள் அனைவரோடும் கடவுளுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறோம் என்று அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர் அதன் பங்கேற்பாளர்கள்.

உங்களின் எதிர்பார்ப்புகள், கேள்விகள் மற்றும் அச்சம் ஆகியவற்றைத் தாங்கிக் கொண்டு உங்கள் இறைவேண்டலால் நாங்கள் ஆதரிக்கப்பட்டோம். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கேட்டுக்கொண்டது போல், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு செவிசாய்த்தல் மற்றும் தேர்ந்து தெளிதலுக்கான நீண்டதொரு செயல்முறை தொடங்கப்பட்டது என்றும், கடவுளின் அனைத்து மக்களுக்குமான திருஅவையாக, தூய ஆவியாரின் வழிகாட்டுதலின் கீழ் ஒன்றிணைந்து பயணிக்க மறைபரப்பின் சீடர்கள் இயேசுவின் வழியை பின்பற்றுவதில் தங்களையே முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டுள்ளனர் என்றும் கூறியுள்ளனர்.

ஒன்றாக,நமது பணிகள், பண்புநலன்கள் மற்றும் பணிகளின் நிரப்புதலில், நாங்கள் கடவுளுடைய வார்த்தையையும் மற்றவர் களின் அனுபவத்தையும் தீவிரமாகக் கேட்டோம். ஆவியாரின் வழியில் உரையாடலைப் பயன்படுத்தி, ஒவ்வொரு கண்டத்திலிருந்தும் எங்கள் சமூகங்களின் வளமையையும் வறுமையையும் நாங்கள் தாழ்மையுடன் பகிர்ந்து கொண்டோம், தூய ஆவியானவர் இன்று திருஅவைக்கு என்ன சொல்ல விரும்புகிறார் என்பதை அறிய முயல்கிறோம் என்றும் உரைத்துள்ளனர்.

இலத்தீன் பாரம்பரியத்திற்கும் கிழக்கு கிறிஸ்தவத்தின் மரபுகளுக்கும் இடையில் ஒருவருக்கொருவர் பரிமாற்றங்களை வளர்ப் பதன் முக்கியத்துவத்தை நாம் அனுபவித் திருக்கிறோம் என்றும், மற்ற திருஅவைகள் மற்றும் திருஅவை சமூகங்களின் சகோதர



*உலக ஆயர்கள் மாமன்றத்தில் கலந்துரையாடல்*

பிரதிநிதிகளின் பங்கேற்பு எங்கள் விவாதங் களை ஆழமாக வளப்படுத்தியது என்றும் தெரிவித்துள் ளனர்.

ஒரு நெருக்கடியான உலகத்தின் சூழலில் எங்கள் கூட்டம் நடந்தது, அதன் காயங்களும் அவதூறான ஏற்றத்தாழ்வுகளும் எங்கள் இதயங்களில் வலியுடன் எதிரொலித் தன என்றும் உரைத்துள்ள மாமன்றத்தின் உறுப்பினர்கள்,கொடிய வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்காக நாங்கள் இறைவேண்டல் செய்தோம், இடம் பெயர்விற்குக் காரணமான துன்பம் மற்றும் ஊழலால் கட்டாயப்படுத்தப்பட்ட அனை வரையும் மறக்கவில்லை என்றும், நீதி மற்றும் அமைதியைக் கட்டியெழுப்ப பாடுபடும் உலகெங்கிலும் உள்ள பெண்கள் மற்றும் ஆண்களுடன் எங்கள் ஒன்றிப் பையும் அர்ப்பணிப்பையும் உறுதி செய் தோம் என்றும் எடுத்துக்காட்டியுள் ளார்.

நாளுக்கு நாள், மேய்ப்புப்பணி மற்றும் மறைப்பணி மாற்றத்திற்கான அழுத்தமான அழைப்பை நாங்கள் உணர்ந்தோம் என்றும், கடவுள் உலகை அன்புகூர்ந்த எல்லையற்ற பிறரன்பு பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதன் வழியாக நற்செய்தியை அறிவிப்பதே திருஅவையின் பணியாகும் (காண். யோவான் 3:16) என்றும் எடுத்துக்காட்டியுள்ளனர் உறுப் பினர்கள்.

புனித பேதுரு பெருங்கோவில் வளாகத் திற்கு அருகில் உள்ள இல்லமற்ற மக்களிடம் இந்த ஆயர்கள் மாமன்றத்தின்போது திருஅவைக் குறித்த எதிர்பார்ப்புகள் குறித்துக் கேட்டபோது, ‘அன்பு’ என்றே அவர்கள் பதிலளித்தனர் என்று சுட்டிக் காட்டியுள்ள உறுப்பினர்கள், இந்த அன்பு எப்போதும் திருஅவையின் தீவிர இதயமாக இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட் டுள்ளனர்.

பொதுநிலையினர், பெண்கள் மற்றும் ஆண் கள், அனைவரும் தங்கள் திருமுழுக்கின் வழியாக அர்ப்பண வாழ்வு வாழ்வதற்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்பதற்குத் திருஅவை செவிசாய்க்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள் ளனர்.

நாம் அன்புகூரவும், பணியாற்றவும் அழைக் கப்பட்டுள்ள இவ்வுலகமானது, தன் முரண்பாடுகளின் மத்தியிலும் கூட, திருஅவை தனது பணியின் அனைத்து பகுதிகளிலும் ஒத்துழைப்பை வலுப்படுத்த வேண்டும் என்று கோருகிறது என்றும், இந்த அழைப்புக்குப் பதிலளிக்க நாம் அச்சம் கொள்ள தேவையில்லை. ஒன்றி ணைந்த பயணத்தில் முதன்மையாக இருக்கும் திருஅவையின் அன்னை மரியா நமது திருப்பயணத்தில் நமக்குத் துணையாக வருகிறார். மகிழ்ச்சியிலும் துயரத்திலும், அவர் தன் மகனைக் காட்டி நம்மை நம்பும்படி அழைக்கிறார். அவரே இயேசு, நம் ஒரே நம்பிக்கை! என்று கூறி இக்கடிதத்தை நிறைவு செய்துள்ளனர்.

*செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்*

# புனித அன்னம்மாள் திருத்தலத்தில் 15 தம்பதியினர் திருமண வாக்குறுதியை புதுப்பித்தனர்

**புக்கிட் மெர்தாஜாம்:** புனித அன்னம்மாள் மைனர் திருத்தலப் பங்கின் தமிழ் திருத்தூதுப் பணிக்குழுவின் ஏற்பாட்டில் மேற்கண்ட நிகழ்வு நடைபெற்றது. கடந்த அக்டோபர் திங்கள் 22-ம் திகதி, தமிழ் திருப்பலி கொண்டாட்டத்தில் அருள்தந்தை நெல்சன் ஜோசப் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இத்திருமண மணிவிழா நிகழ்வில் திருமணமாகி 25ஆண்டுகளுக்கு மேலான 15 தம்பதியர் அவர்கள் தம் குடும்பத்தோடு பங்கேற்று கடவுளுக்கு நன்றி கூறினர்.

திருப்பலியின் போது, தங்களது திருமண வாக்குறுதியை நினைவுகூர்ந்து புதுப்பித்தனர் என்பது குறிப்படத்தக்கது. இந்த வாக்குறுதியின் ஒரு அங்கமாக, இவர்கள் மீண்டும் மோதிரம் அணிவித்து, மாலை மாற்றிக்கொண்டனர்.





தொடர்ச்சி, அடுத்தப் பக்கம்

# 15 தம்பதியினர் திருமண வாக்குறுதியை நினைவுகூர்ந்து புதுப்பித்தனர்

(முதல் பக்கத் தொடர்ச்சி.

அன்று ஆலயம் விழாக்கோலம் பூண்டது என்றால் மிகையாகாது. தம்பதிகளுக்கும் அவர்கள் குடும்ப உறுப்பினர்களுக்கும் மண்டபத்தில் விருந்துபசரிப்பும் வழங்கப் பட்டது. இது ஒரு வரலாற்று நிகழ்வு எனக் குறிப்பிடும் வகையில், பல சிரமங்களுக் கிடையில் இந்த திருமண மணிவிழாவை மிகச்சிறப்பாகச் செய்து முடித்த பங்கின் தமிழ் திருத்தூதுப் பணிக்குழுவின் இந்த முயற்சி பெரும் வெற்றி என்றே முழங்க வேண்டும். இதன்வழி தம்பதிகள் யாவரும் தங்களின் நன்றியினை ஏற்பாட்டுக் குழுவினருக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும், பங்குத் தந்தைக்கும் தெரிவித்துக் கொண்டனர்.

இன்றைய நவீன காலத்தில் கிறிஸ்தவத் தம்பதிகளும் திருமணத்தின் முக்கியத்துவம் அறியாமல் சிறு சிறு காரணங்களால் திருமண விலக்குக் கேட்டு பிரிகிறார்கள். கணவன், மனைவியின் எதிர்காலத்தையும், மனைவி, கணவனின் எதிர்காலத்தையும், மிகவும் முக்கியமாகக் பிள்ளைகள் எதிர்காலத்தையும் சிந்திக்காமல், எதிர்மறை விளைவுகளைப் பொருட்படுத்தாமல் ஆளுக்கொரு திசையாகப் போகிறார்கள்.



திருமணம் செய்து கொள்வது பிரிவதற்காக அல்ல, மாறாக வாழ்நாள் முழுவதும் கணவன், மனைவி இருவரும் ஒரே உடலாக நிலைத்து, இன்பத்திலும் துன்பத்திலும் ஒருவரை ஒருவர் அன்பு செய்வதில் என்றும் நிலைத்து இருந்து கடவுளுக்கும் நம் திருஅவைக்கும் சாட்சியாக வாழ்வதே ஆகும் எனும் கருத்தோட்டம் இத்தம்பதிகள் வழி பங்கு மக்களுக்கும் இளையோருக்கும் உணர்த்தப்பட்டது.

‘வாலிபங்கள் ஓடும் வயதாகக்கூடும்
ஆனாலும் அன்பு மாறாதது.
மாலையிடும் சொந்தம் முடிபோட்ட பந்தம்
பிரிவென்னும் சொல்லே அறியாதது.

*செய்தி: ஏ.கே.சௌரி*

# ஈப்போவில், அருளாளர்கள், புனிதர்கள் திருப்பண்டங்களுக்கு சிறப்பு திருவணக்கம் செலுத்தப்பட்டது

**ஈப்போ:** அனைத்து புனிதர் பெருவிழாவை முன்னிட்டு ஈப்போ புனித லூர்து அன்னை தேவாலயத்தில் புனிதர்கள் மற்றும் அருளாளர்களின் திருப்பண்டங்கள் திருக்காட்சிக்கும் மக்களின் திருவணக்கத்திற்கும் காட்சி பொருள்களாக வைக்கப்பட்டன.

அந்நிகழ்ச்சி பினாங்கு மறைமாவட்ட மறைக்கல்வி ஆணையத்தின் கீழ் இயங்கும் திருப்பண்டம் பணிக்குழுவினரால் பங்கு மண்டபத்தில் மிக நேர்த்தியாகவும் அருள் மிக்கதாகவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கடந்த அக்டோபர் திங்கள் 21 மற்றும் 22-ஆம் நாள் வரை ஏற்பாடு செய்யப் பட்டிருந்த அச்சிறப்பு நிகழ்வில் பங்குத்தந்தை அருள்பணி ரோபர்ட் டேனியல் மற்றும் திருத்தொண்டர்கள் ஜோர்ஜ் வைத்தியநாதன் மற்றும் சந்தனசாமி அவர்களின் உடனிருப்புடன் தூபம் காட்டி வழிப்பாட்டு முறையோடு இந்நிகழ்வைத் தொடக்கி வைத்தார்.

சுமார் 75 அருளாளர்கள் மற்றும்



புனிதர்களின் திருப்பண்டங்கள் திருவணக்கத்திற்கும் திருக்காட்சிக்கும் வைக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத் தக்கது. அவை முறையே, முதல் நிலை அருளிக்கங்களான உடற்பகுதி, எலும்பு, சாம்பல், முடி, தசைகளுடனான துணி, இரத்தம் படிந்த துணி போன்றவை யாகும். இரண்டாம் நிலை அருளிக்கங்களான சவப்பெட்டி, அங்கி, ஆகியவை யாகும். மூன்றாம் நிலையானவை முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலையைத் தழுவி எடுக்கப்பட்ட பண்டங்கள், கல்லறையிலிருந்து எடுக்கப்பட்ட கற்கள், போன்றவையாகும்.

இத்திருக்காட்சியைக் காண ஏறக்குறைய 1000 பேர் பங்கிலிருந்தும் சுற்றுவட்டாரத்திலிருந்தும் வந்திருந்தனர்.

பங்குத் தந்தை அவர்கள் இத்திருக்காட்சி மற்றும் வணக்கத்திற்குரிய அருளிக்கங்கள் இளைஞர்களுக்கும் எதிர்காலச் சமுதாயத்தினருக்கும் ஓர் எடுத்துக்காட்டாக அமையும் எனக் கூறினார். இதன்வழி, ஈப்போ புனித லூர்து மாதா பங்கு மக்களின் ‘புனிதத்துவத்தை நோக்கிய’ பயணம் இனிதே தொடங்கியது.

# 2021-ன் இறுதி கணக்கெடுப்பின்படி, உலக மக்கள் தொகையில் 17.6 % கத்தோலிக்கர்கள்

கடந்த அக்டோபர் மாதம் 22ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமையன்று, திருஅவையில் 97வது உலக மறைபரப்பு ஞாயிறு சிறப்பிக்கப்பட்டதையொட்டி உலக திருஅவை குறித்த சில புள்ளிவிவரங்களை வெளியிட்டுள்ளது, நற்செய்தி அறிவிப்புக்கான திருப்பீடத் துறையின் பிதெஸ் செய்தி நிறுவனம்.

2021ஆம் ஆண்டு இறுதியில் உலகில் 778 கோடியே 57 இலட்சத்து 69 ஆயிரம் மக்கள் இருந்ததாகவும், அது அதற்கு முந்தைய ஆண்டைவிட 11 கோடியே 86 இலட்சத்து 33ஆயிரம் அதிகம் எனவும் கூறும் இச்செய்தி நிறுவனம், கத்தோலிக்கர்களின் எண்ணிக்கை 2020ஆம் ஆண்டின் எண்ணிக்கையிலிருந்து 1 கோடியே 62 இலட்சத்து 40 ஆயிரம் அதிகரித்து 2021ஆம் ஆண்டின் இறுதியில் 137 கோடியே 58 இலட்சத்து 52 ஆயிரமாக இருந்தது என தெரிவிக்கிறது.

ஐரோப்பாவில் கத்தோலிக்கர்களின் எண்ணிக்கை இக்காலக்கட்டத்தில் 2 இலட்சத்து 44 ஆயிரம் குறைந்துள்ளதாகவும், கத்தோலிக்கர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள கண்டங்களில் ஆப்ரிக்கா முதலிடத்திலும், இரண்டாவது இடத்தில் அமெரிக்காவும், மூன்றாவது இடத்திலேயே ஆசியாவும் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கத்தோலிக்கர்களின் எண்ணிக்கை 2020ஆம் ஆண்டைவிட 0.06 விழுக்காடு 2021ல் குறைந்து, உலக மக்கள் தொகையில் 17.67 விழுக்காடு இருந்ததாக உரைக்கும் பிதெஸ் செய்தி நிறுவனம், உலகில் ஆயர்களின் எண்ணிக்கை இதே காலக்கட்டத்தில் 23 குறைந்து 5340 ஆக இருந்ததாகவும், உலகில் அருள்பணியாளர்களின் எண்ணிக்கையும் 2347 குறைந்து 4 இலட்சத்து 7ஆயிரத்து 872 ஆக இருந்ததாகவும், இந்த எண்ணிக்கைக் குறைவில் முதலிடத்தில் ஐரோப்பாவும் இரண்டாம் இடத்தில் அமெரிக்கக் கண்டமும் இருப்பதாகவும் தெரிவிக்கிறது.

உலகில் கத்தோலிக்கத் திருஅவை நடத்தும் கல்வி நிலையங்களின் எண்ணிக்கை, அதில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை, கத்தோலிக்கத் திருஅவையால் நடத்தப்படும் மருத்துவமனைகள், பிறரன்பு மையங்கள், பராமரிப்பு இல்லங்கள், பெற்றோரால் கைவிடப்பட்ட குழந்தைகளுக்கான இல்லங்கள் என திருஅவையின் உலகளாவிய பல்வேறு சேவைகள் குறித்த விவரங்களும் பிதெஸ் செய்தி நிறுவனத்தால் 97வது உலக மறைபரப்பு ஞாயிறையொட்டி வெளியிடப் பட்டது.

# நாம் கிறிஸ்துவின் மாட்சிக்கு உரியவர்

இன்று ஆண்டின் பொது காலத்தின் 31-ம் ஞாயிறு. கடவுள் முன்னிலையில் தம்மைத் தாழ்த்திக் கொள்பவர்கள் உயர்த்தப்படுகிறார்கள் என்பது மையச் செய்தியாக நமக்குத் தரப்பட்டுள்ளது. முதல் வாசகத்தில் பொறுப்பு, பணி என்பது நாம் அனுபவிப்பதற்கு அல்ல. அது மற்றவர்களுக்கு நன்மை செய்வதற்கு பயன்படுவது என்று கூறுகிறார் இறைவாக்கினர் மலாக்கி.

சமயம் என்பது பள்ளத்திலே வீழ்ந்து கிடக்கிற மக்களை தூக்கிவிடுவதாக இருக்க வேண்டும். மேலும், மேலும் அவர்கள் மண்ணோடு மண்ணாக புதைக்கப்பட காரணமாக இருக்கக்கூடாது எனும் கருத்தை வலியுறுத்துகிறார்.

பத்துக்கட்டளைகளின் அடிப்படை நெறியை இரண்டு வகைப்படுத்தலாம். கடவுளை நேசிப்பது, மனிதர்களை நேசிப்பது ஆகும்.

மதங்கள், வழிபாடுகள் அனைத்தும் மக்களை அடிமைத்தளையிலிருந்து விடுவிப்பதாக இருக்க வேண்டும். மக்களுக்கு மன ஆறுதல் தரும் இடங்களாக ஆலங்கள் அமைய வேண்டும். ஒழுங்குமுறைகள் தேவை. அந்த ஒழுங்குமுறைகள் மக்களுக்கு சுமையாக, தூக்க இயலாத பாரமாக இருக்கக்கூடாது

திருப்பாடலில், நம்முடைய வாழ்வில் நாம் எப்போதும் அமைதிக்காக இறைவனை நாட வேண்டும். அந்த அமைதியை ஆண்டவர் மட்டும் தான் தர முடியும். வேறு எவராலும் நாம் தேடுகின்ற அமைதியைத் தர முடியாது என கூறக் கேட்கிறோம்.

இன்றைய இரண்டாம் வாசகமானது, புனித பவுலடியாரைப்போல, நாம் வாழ்ந்தாலும், இறந்தாலும் கிறிஸ்து மாட்சி பெறட்டும் என்ற எண்ணம் நமக்குள்ளாக மேலோங்கியிருக்கின்ற போது, கடவுள் நம்மை உயர்த்துவார். நம்முடைய வாழ்வு கடவுளை மாட்சிபடுத்த வேண்டுமே தவிர, நம்மையே மாட்சிபடுத்துவதாக இருக்கக் கூடாது என்பதோடு, போதிப்பவர்களின் வாழ்வு முன்மாதிரியான வாழ்வாக அமைய வேண்டும் என்பதனை உணர்த்துகின்றது பவுலடியாரின் அனுபவங்கள்.

நற்செய்தியானது, கிறிஸ்துவே நம் சிறந்த வழிகாட்டி, அவரே வாழ்வும் வழியும். கிறிஸ்து காட்டும் வழியில் நாம் நடந்தால் நிச்சயம் நமக்கு வாழ்வு உண்டு என்று விவரிக்கிறது. அத்துடன், மக்கள் முன்னிலையில் முதன்மையான இடங்களையும், பகட்டான ஆடைகளையும், உயர்ந்த பதவிகளையும் நாடாமல் சகோதர மனப்பான்மையோடு வாழ வேண்டும் என்று இயேசு போதிக்கிறார்.

ஆகவே, நாம் பிறரையே அதிகமாக அன்பு செய்யவும் பிறரையே முதன்மைப்படுத்தவும் பிறரையே புகழவும் விரும்புகின்றவர்களாக நமது தாழ்மையினால் உயர்வடைகின்ற உயர்ந்த உள்ளம் பெற்றிட வரம் கேட்போம்.

மேலும், இயேசு மண்ணுலகில் எவரையும் தந்தை என நீங்கள் அழைக்க வேண்டாம். ஏனெனில் உங்கள் தந்தை ஒருவரே. அவர் விண்ணகத்தில் இருக்கிறார் என்கிறார். இது ஒரு உருவகப் போதனை. நம்மிடையே ஏற்றத்தாழ்வு இருக்கக்கூடாது என்பதற்காக இயேசு முன்வைத்த ஒரு புரட்சிமிகு போதனை. கடவுளை அனைவரும் தந்தையாக ஏற்றுக்கொண்டால், மனிதர் மத்தியில் எந்தவொரு வேறுபாடும் இருக்க வழியில்லை. நம்மை ஈன்ற தந்தை ஒருவர்தான். ஆனால், ஆன்மீக ரீதியில் அனவருக்கும் ஒரே தந்தையாக இருப்பவர் கடவுள் என்பதை இயேசு வலியுறுத்துகிறார்.

நம்மில் நாம் வேற்றுமை பாராட்டி நமக்குள் பிரிவினைகள் ஏற்படுத்தாமல், கிறிஸ்துவில் நமது ஒன்றிப்பை மேன்மைப்படுத்துவோம்.

*கிரேஸ் ஜோசப் பெஸ்தாரி ஜெயா*

**ஆண்டின் பொதுக்காலம் 31ம்-ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | மலாக்கி 1:14b-2:1-2,8-10 |
| தி.பா | 131: 1.2.3 |
| 2-ம் வாசகம் | 1 தெச 2: 7b-9,13 |
| நற்செய்தி | மத் 23: 1-12 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை- வாரம் 2**